கண்டிருக்கின்றார்கள். அவர்கள் கரும்புச் சாற்றிலிருந்து எரி பொருள்கள் தயாரிக்கக்கூடிய காரணத்தினாலே இந்த ஆண்டு சர்க்கரை இறக்குமதி செய்யக்கூடிய அளவில் அங்கு மாற்றம் ஏற்பட்டிருக்கின்ற செய்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே நம்முடைய நாட்டிலேயும் கரும்புச் சாற்றிலிருந்து எரி பொருள்கள் உற்பத்தி செய்ய ஆய்வு நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மொலாசஸிலிருந்து இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால் தயாரித்து, அதன் மூலம் பெட்ரோலாக மாற்றி அதன் மூலமாக கார்களை ஓட்டுவது பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி நம்முடைய மாநிலத்திலே உள்ள தனியார் துறையில் ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது எக்கனாமிக்கலி-வையபிலாக இருக்குமா, பொருளாதார அடிப்படையிலே விலை சரியாக வருகிறதா என்று பார்த்தால் அதிக விலையாக வருகிறது. நல்லவேளையாக நரிமணத்திலே கோயில்களப்பால் பகுதியில் அற்புதமான அளவில் எண்ணெய் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. நானே போன வாரம் போய் பார்த்தேன். ஆகவே நமக்கு கரும்பு சர்க்கரை உற்பத்தியை நிறுத்தி எண்ணெய் வளம் தேட வேண்டியதில்லை. அரியலூரிலிருந்து இராமேஸ்வரம் வரையில் எண்ணெய் வளம் இருக்கிறது. இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் ஏற்றுமதிக்கும் எண்ணெய் கிடைக்கும்போல் இருக்கிறது.

செய்துங்கநல்லூர் குடிநீர்த் திட்டம்.

11—(* வினா எண். 12692) **திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்துங்கநல்லூர் குடிநீர்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது குடிநீர் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிதம்பரனார் மாவட்டம் செய்துங்கநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு திட்ட அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

1987 நவம்பர் 10]

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டம் விரைவில் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் 1981-வது ஆண்டுமுதல் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வேண்டும் என்று பலமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வறட்சி நோத்திலேகூட அங்கு லாரிகள் மூலமாகத்தான் குடிநீர் கொடுக்கப்பட்டது. அதை மனதிலே வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பல்வேறு கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு இருப்பதால், திட்டப்பணி தொடங்கப்படும். அதில் ஏராளமான கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. நிறைய மக்கள் தொகை இருக்கின்றது. ஆகவே சற்று காலதாமதம் ஆகும். ஓராண்டுக் காலத்தில் முடியுமா என்பது சந்தேகம். சற்று காலதாமதம் ஆகலாம் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் அவர்களே, அந்தப் பகுதியில் சுமார் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், தாமிரவருணி ஆற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதன் காரணமாக நானும் அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் கூடி உண்ணாவிரதம் இருக்க நேரிட்ட நேரத்தில் எஸ்.ஈ. திரு. நாராயணன் அவர்கள் இதை ஓராண்டுக் காலத்தில் நிறைவு செய்வதாகச் சொல்லியிருந்தார்கள். ஆறு ஆண்டுகாலம் ஆகியும் அந்த மக்கள் குடிநீர் பெறமுடியாமல் மிகவும் அவதியுறுகின்றார்கள். அதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை முடித்துத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததாலே 6 ஆண்டுகள் ஆயிற்றோ என்னவோ எனக்குத்

தெரியாது. அது உள்ளபடியே பல கிராமங்கள் அடங்கிய திட்டம். அத்தோடு அந்த இடத்திலே, தாமிரவருணி ஆறு தவிர்த்து மற்ற இடங்களில் உப்பு நீர் தான் இருக்கின்றது. ஆகவேதான் தாமிரவருணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது. திட்டம் போட்டு விரைவில் நிறைவேற்றப் படும். அதற்கான பணிகள் தொடங்கப்படும். ஆனால் ஓராண்டிலே முடிந்துவிடுமா என்பதைப் பற்றி தற்போது சொல்வதற்கில்லை.

விருதுநகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

12—(* வினா எண். 12868) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விருதுநகருக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30—10—1986-ல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் எந்தவிதமான சர்வேயும் நடத்தப்படவில்லை. சென்ற ஆண்டு முதலே அந்த நகராட்சியில் வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாக இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் எந்த வேலையும் அங்கே நடைபெறவில்லை. நீண்டகாலமாக ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத் தலைநகராக இருக்கிறது. அங்கே சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது. ஆகவே இத்திட்டத்தினை சீக்கிரம் நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்படுமா?